செ.வெ.எண். 401/2017 நாள்: 12.08.2017

**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான பள்ளி மாணவ-மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30.08.2015 அன்று வண்டலூர், கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலைய முனையத்தில் நடைபெறவுள்ளது. அதனையொட்டி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கில் பள்ளி மாணவ-மாணவியர்களிடையே நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்து பேசினார்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மாணவ-மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டவர். கல்வித் துறையில் சிறப்பான திட்டங்களை தீட்டி, மாணவர்கள் வளர்ச்சிக்காக செயல்படுத்திய, அவரின் நூற்றாண்டு விழா, மென்மேலும் மாணவர்களுக்கு நல்லதெரு ஊக்கத்தை தரும் வகையில் அமைந்துள்ளது. அதனால் தான் தமிழக அரசு தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து (Handball), கபடி, கையுந்துபந்து (Volleyball) மற்றும் நீச்சல் போட்டிகள் அடங்கிய மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாணவர்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு நடத்தி, ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது என கூறினார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.சந்தோஷ் ஹதிமானி இ.கா.ப., காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் திரு.பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் காஞ்சி பன்னீர் செல்வம், மாவட்ட கல்வி அலுவலர் திரு.வி.கார்த்திகேயன், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.அருணா, மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**